# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண். 3 / 2016**

திரு. J. மாதவன்,
12/68, தாயார் குளம் தெரு,
பிள்ளையார் பாளையம்,
அமர்ந்தவள் அரிசி ஆலை,
காஞ்சிபுரம் . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
காஞ்சிபுரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
ஒலி முகமது பேட்டை,
காஞ்சிபுரம் – 631 502 . . . . . . எதிர்மனுதாரர்
(திரு. T. பிரசாத், செயற்பொறியாளர்/வடக்கு
காஞ்சிபுரம்)

**ஆணை நாள் : 18–4–2016**

1. திரு. J. மாதவன், பிள்ளையார் பாளையம் அவர்கள் தன்னுடைய 31.8.2015 நாளிட்ட மனுவிற்கு காஞ்சிபுரம் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் எந்த தீர்வும் வழங்கவில்லை என்று தெரிவித்து தன்னுடைய 28.12.2015 நாளிட்ட மனுவை தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார். மன்றத்தில் மனு செய்து 50 நாட்கள் கடந்த பின்பும் பதில் எதுவும் பெறப்படவில்லை என்பதால் மேற்கண்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.3/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு எண்.304–010–47ன் கணக்கில் அதிகப்படியாக உள்ள காப்புத்தொகை ரூ.1,45,898/–ஐ திரும்ப வழங்க உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டின் நகல், மேற்பார்வை பொறியாளர், காஞ்சிபுரம் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 8.1.2016 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

4 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை 11.4.2016 அன்று நடத்தப்படும் என்று 28.3.2016 நாளிட்ட அறிவிப்பின்படி இருதரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

5. 11.4.2016 அன்று நடைபெற்ற கேட்புரையில் மேல்முறையீட்டாளர் கலந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரர் சார்பில் திரு. T. பிரசாத், செயற்பொறியாளர்/இ&ப/வடக்கு காஞ்சிபுரம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. கேட்புரை நாளில் செயற்பொறியாளர்/வடக்கு காஞ்சிபுரம் அவர்கள் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவரின் மின்னிணைப்பு எண்.304–010–47இன் கணக்கில் அதிகமாக இருந்த காப்புத்தொகையான ரூ.1,41,883/– காசோலையாக கடந்த 25.1.2016 அன்று மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக ரூ.1,41,883/–ற்கான காசோலையின் நகல் மற்றும் அந்த காசோலையை மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் கடிதத்தின் நகலையும் அளித்தார். மேலும், மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள கோரிக்கை நிறைவேறிவிட்டதால் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

7. மேல்முறையீட்டாளர் திரு. J. மாதவன், அவர்கள் தன்னுடைய 11.4.2016 நாளிட்ட கடிதத்தில் கடந்த 25.1.2016 அன்று ரூ.1,41,883/–ற்கான காசோலையை உதவி மின் பொறியாளர், பிள்ளையார் பாளையம் அவர்களின் அலுவலகம் வாயிலாக பெற்றுக்கொண்டதாக தெரிவித்து, அவருடைய மனுவின் மீது தொடர் நடவடிக்கை தேவைப்படாத காரணத்தால் அதனை முடித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"எனது அரிசி ஆலை மின் இணைப்பு எண்.604–010–47 மேற்படி முகவரியில் இயங்கி வருகின்றது. அதனுடைய மின் வைப்பு தொகையை அதிகமாக உள்ளதை திருப்பி வழங்கிதரும்மாறு தங்களிடம் கடந்த 28.12.2015 அன்று மனு அளித்திருந்தேன். அதன் பொருட்டு அம்மின் வைப்பு தொகையை ரூபாய்.1,41,883/–ஐ காசோலையாக கடந்த 25.1.2016 அன்று எனக்கு உதவி மின்பொறியாளர், பிள்ளையார் பாளையம் அலுவலகம் வாயிலாக பெற்று கொண்டேன் மற்றும் அதற்கான ஒப்புதலையும் அளித்துள்ளேன்.*

*எனவே, மேற்கண்ட தொகையை பெற நான் தங்களிடமும் மற்றும் மேற்பார்வை பொறியாளர், காஞ்சிபுரம் (மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர்) அவர்களிடமும் அளித்த என்னுடைய இரு மனுக்கள் மீதும் தற்போது அத்தொகையை வழங்கப்பட்ட காரணத்தாலும் அதன் தொடர் நடவடிக்கை இனிமேல் தேவைப்படாத காரணத்தால் தாங்கள் அதனை முடித்து கொள்ளலாம் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஆகையால், இந்த மனு மீதான வழக்கினை இனிமேல் தொடர வேண்டாம் என்பதனையும் இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன். மேலும், என்னால் நேரில் வர இயலாத காரணத்தால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். "*

8. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பு எண்.604–010–47ல் அதிகப்படியாக உள்ள காப்பு வைப்புத்தொகையான ரூ.1,41,833/– திரும்ப அவருக்கு வழங்கப்பட்டுவிட்டதால் அவரின் மேல்முறையீட்டு மனுவின் மீது தொடர் நடவடிக்கை தேவை இல்லை அதை முடித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளதால், மேல்முறையீட்டு மனு எண். 3/2016 வேறு நடவடிக்கை தேவை இல்லை என்று தள்ளுபடி செய்யப்படுகிறது செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. J. மாதவன்,
12/68, தாயார் குளம் தெரு,
பிள்ளையார் பாளையம்,
அமர்ந்தவள் அரிசி ஆலை,
காஞ்சிபுரம்

2)  மேற்பார்வை பொறியாளர்,
காஞ்சிபுரம்  மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
ஒலி முகமது பேட்டை,
காஞ்சிபுரம் – 631 502

3)  தவைர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
காஞ்சிபுரம்  மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
ஒலி முகமது பேட்டை,
காஞ்சிபுரம் – 631 502

4)  தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணிணி) –  **மின்குறைதீர்ப்பாளர் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்
சென்னை – 600 008.